## பாலியல் – பெண் கொடுமை தாண்டவமாடுகிறது! த.வெ.க. ஆட்சியில்

# தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு காற்றில் பறக்கிறது!

### கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கழக வர்த்தகர் அணி கூட்டத்தில் கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 3-

கழக வர்த்தக அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம் 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை, கழக அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில், கழக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

கழக நிர்வாகிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1. நம்மை வளர்த்து ஆளாக்கிய, எட்டு கோடி தமிழர்களின் எட்டாவது அதிசயம், திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 ஜூன் 3ல் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாய் பிறந்தவர்.





கழக வர்த்தகர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் அணியின் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் மதுரை தனசெல்வன், சென்னை மோகன், வி.பி.மணி, பி.டி.பாண்டிச் செல்வம், கன்னியாகுமரி தாமரை பாரதி, மீஞ்சூர் பாஸ்கர் சுந்தரம், காஞ்சி வி.எஸ். ராமகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகிகள் கோவை வேலுச்சாமி, அரியலூர் செல்வராஜ், மயிலை பாலு, புதுக்கோட்டை முத்து, காஞ்சிபுரம் மார்த்தாண்டன், பவானி சுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

**பெருமைமிகு தலைவர் கலைஞர்!**

பெண்களுக்கு சொத்துரிமை கேட்டதை, தீர்மானமாக தந்த பெரியாரின் எண்ணங்களுக்கு வடிவம் தந்தவர், கைரிக்‌ஷாவை ஒழித்தவர் சமத்துவபுரம் கண்டவர் தொழுநோயினை விரட்டியவர் முட்டையுடன் கூடிய சத்துணவு தந்தவர்.

பலமுனை வரியை ஒழித்தவர் வணிகர்களின் நலன் காக்க "வணிகர் நல வாரியம் தந்தவர்" கல்வியில், வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீட்டை அதிகரித்தவர், கண்ணொளி திட்டம் தந்தவர், தமிழுக்கு "செம்மொழி" தகுதி பெற்று தந்தவர்.

வள்ளுவனுக்கு கன்னியாகுமரி கடல் நடுவில் திருவள்ளுவர் சிலையை வடிவமைத்தவர். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வாய்ப்பு, டைட்டில் பார்க் தொழில் புரட்சி செய்தவர்.

உழவர் சந்தை, பெண்கள் சுய உதவி குழு என வரலாறு படைத்த, மறு பெரியாராம் கலைஞரை போற்றிடும் வகையில், நமது கழகத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளான ஜூன் 3ல் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்கமோதிரம் மற்றும் அந்த வாரத்தில் அசைவ உணவு இனிப்பு வழங்குதல் கழக கொடி ஏற்றுதல் என்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**கொலை – கொள்ளை தடுக்கப்பட வேண்டும்!**

2. கரூர் சம்பவத்திற்கும், கொடநாடு கொலைக்கும் காரணமானவர்கள் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும், ஒன்றிய அரசின் வழக்கு தீவிர படுத்த வேண்டும். குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும்.

3. தமிழ்நாட்டின் மோடியாக வாழ்ந்து வரும் முதல்வர் விஜய், நிருபர்களின் கேள்விகளை சந்தித்து பதில் வழங்க வேண்டும்.

செய்தியை, செய்தியாளர்களை புறக்கணித்தால் தமிழக வெற்றிக்கழக ஆட்சி இன்னும் மூன்று மாதம் கூட நீடிக்காது என தைரியமாக கருத்துப்படம் வெளியிட்ட "மாலை முரசு" நாளிதழுக்கும் ஆசிரியருக்கும் இந்த அவை நன்றி கூறுகிறது.

4.அற்ற குளத்து அறுநீர் பறவையாய், விளம்பர த்துக்காக தன்னை மாற்றிக் கொள்ளாமல், தொடர்ந்து தி.மு.க. வையும், எங்கள் நெஞ்சத்தில் தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் தளபதியையும் தாங்கி செய்தி வெளியிடும் "தினகரன்" நாளிதழையும் வாழ்த்துகிறோம்.

**காவி விசுவநாதனுக்கு கடும் கண்டனம்!**

5. பல்கலைக்கழக வேந்தராக தமிழக முதல்வர் இருக்க வேண்டிய அவசியம் இல்லை கவர்னரே இருக்கலாம் என்று சொன்ன கதர்காவி விஸ்வநாதனுக்கு எங்கள் கண்டனம். கவர்னர் ஆட்சி கூடாது என்பதற்காகத்தான் ஆதரவு தருகிறோம் என கூறி விட்டு, கவர்னருக்கு அதிகாரத்தை கொடுக்கும் இரட்டை வேட கபடதாரி காங்கிரசை கண்டிக்கிறோம்.

6. முயலுக்கு ஆசைப்பட்டு சிங்கத்தை கோட்டை விட்டது போல, இரண்டு மாநில அமைச்சருக்காக இந்தியா முழுவதும் காவி எதிர்ப்பு பேசி வந்த, தி.மு.க.வை கைவிட்ட ராகுலை இந்த மாமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

7.கேரளாவில் பதவியேற்பு விழாவில் பங்கேற்காத விஜய், புதுடெல்லி வரை சென்று பிரதமரை பார்த்து விட்டு, சோனியா, ராகுலை பார்க்காமல் வந்ததற்கு பிறகு, வேண்டா விருந்தாளியாக தூணை பிடித்துக்கொண்டு, எச்சில் சோறுக்கு நிற்கின்ற ராகுல், இந்த அவமானத்தை மனதில் கொண்டு, தங்கள் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வெளியே வந்து, காங்கிரஸிற்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையையாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

**உதயநிதிக்கு பாராட்டு!**

8. சட்டமன்றத்தில் சுவையாகவும், ஆழமாகவும், வீரமாகவும் பேசிய எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த மாமன்றம் பாராட்டுகிறது.

9. உலக வரலாற்றிலேயே ஒரு தலைவன் தோற்பதும், அந்த தலைவன் நன்றி சொல்லப் போனால் ஊரே அழுவதுமான சாதனையை செய்த சரித்திர நாயகனின், வெற்றி இழப்பிற்காக எங்கள் கண்ணீரையும் காணிக்கையாக்குகிறோம்.

10. அரண்மனை கதவை உடைக்கத்தான் நேரம் ஆகும். உடைத்தபின் வரிசையாக படை உள்ளே செல்லும் என்பது போல, முதன் முதலில் 1,000/ ரூபாய் கொடுப்பதுதான் சிரமம். உடைத்த வீட்டில் வரிசையாக செல்லலாம் என்பது போல,

**த.வெ.க. கொடுத்த வாக்குறுதி என்னானது?**

முதலில் மாதம் 1,000/ ரூபாய் கொடுப்பதுதான் சிரமம். ஆனால் கொடுத்த பின் 2,500/ ரூபாய் கொடுப்பது சுலபம். அதைக் கூட கொடுக்காமல் இழுத்தடிப்பதும், விடியல் பயணத்தை விரிவுபடுத்தி தமிழகம் முழுவதும் பெண்கள் இலவச பேருந்து திட்டம் என கூறியது தற்போது என்ன ஆனது? வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதம் 4,000/ என கூறியது என்ன ஆனது? ஆண்டிற்கு ஆறு சிலிண்டர் என்ன ஆனது? கொடுத்த வாக்குறுதியில் ஒன்றையாவது நிறைவேற்றி தந்திட முதல்வர் விஜய்யினை கேட்டுக்கொள்கிறோம்.

**வெறும் பேச்சு விஜயை வன்மையாகக் கண்டிக்கிறோம்!**

11. அ.தி.மு.க. தலைவர் எடப்பாடி பழனிச்சாமியை, பெருந்தன்மையாக அதே வீட்டில் குடி வைத்த அன்றைய முதல்வர் எங்கள் சாதனையின் சிகரம் தளபதியை பாராட்டுவதுடன், பெருந்தன்மையின்றி இன்று எதிர்க்கட்சி என்பதற்காக எடப்பாடி பழனிச்சாமியை, அரசு தந்த வீட்டை விட்டு வெளியேற்றிய கொடுமைக்கார விஜய்க்கு எங்கள் கண்டனத்தை தெரிவிக்கிறோம்.

12. பிறந்த குழந்தைகளுக்கு மோதிரம் என கூறினீர்களே மோதிரம் எங்கே? நடக்கும் கல்யாணங்களுக்கும்தாலிக்கு தங்கம் எங்கே? அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு 15,000/ ரூபாய் எங்கே? முதியோர் உதவித்தொகை 3,000/ ரூபாய் எங்கே? வாக்குறுதி என வீச்சு வீச்சு என கத்திய விஜயை இம்மாமன்றம் கண்டிக்கின்றது.

**இளைஞர்களின் அடையாளம் நம் தளபதி!**

13. ஒன்றிய அரசு ஜனவரி மாதம், தேசிய கீதம் பாடும் நிகழ்வில் அதற்கு முன்பாக "வந்தே மாதரம்" பாட வேண்டும் என்று சொல்லி உள்ளது.

ஆனால் தமிழகத்தில் முதல் பாட்டு "தமிழ்த்தாய் வாழ்த்து" பாட்டு என்பதற்கு எந்த தடையும் இல்லாததால், கடந்த ஜனவரி முதல் மே மாதம் வரை எந்த ஒரு விழாவிலும் தமிழை புறந்தள்ளாமல் முதல் பாட்டாக பாடிய தமிழக அன்றைய முதல்வர், இளைஞர்களின் அடையாளம் தளபதியை பாராட்டுவதுடன், அதை கண்டுகொள்ளாது பிரத மரிடம் சென்று கோரிக்கை வைக்கும் கோமாளி விஜயை கண்டிக்கின்றோம்.

14. ஜூன் 1 முதல் 600க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடி களில் கட்டண உயர்வை அமல்படுத்தும் ஒன்றிய அரசால் பொருளாதாரம் தாக்கப்படும், விலைவாசி ஏறும், ஆதலால் டோல்கேட் கட்டண உயர்வை ரத்து செய்திட ஒன்றிய அரசை வேண்டுகிறோம்.

**லாட்டரி குடும்பத்தின் குதிரைபேர அரசியல்!**

15. வணிகர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பை மாற்றி, மாநில அரசுக்கே அந்த அதிகாரத்தை வழங்கிடுமாறும் வேண்டுகிறோம்.

16. தமிழகத்திற்கு விடுவிக்கப்பட வேண்டிய நிதியை ஒன்றிய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டுகிறோம்.

17. குதிரைப்பந்தயம், லாட்டரியை ஒழித்த தமிழ்நாட்டில், லாட்டரி குடும்பத்தை நுழைய வைத்ததோடு, குதிரைப்பேரம் நடத்தும் விஜய்யினை கண்டிக்கிறோம். ஓ.பி.எஸ், மனோஜ்பாண்டியன், கம்பம் ராமகிருஷ்ணன், அனிதா ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாண்டுகள் கழித்துதான் மாற்று முடிவு எடுத்தார்கள். கொறடா பேச்சை மீறி வாக்களிக்கவில்லை. குதிரைப்பேரம் என்பது தமிழக வரலாற்றில் இப்போதுதான் நடக்கிறது. வேறு உதாரணங்களை கொடுத்து சமாதானப்படுத்த வேண்டாம். குதிரைப் பேரத்தை கண்டிக்கிறோம்.

18. வங்கத்தில் வன்முறை செய்யும் பா.ஜ.க.வினர், வங்கத்தின் முன்னாள் மாநில முதல்வர் மம்தா பானர்ஜியின் மருமகன் அபிஷேக் மீது கருத்துப்போர் நடத்தாமல், கற்களையும், முட்டையையும் வீசி ஜனநாயகத்தை கேலிசெய்கிறார்கள். இம்மாமன்றம் வன்முறை தூண்டும் பா.ஜ.க.வினை வன்மையாக கண்டிக்கின்றது.

19. பாலியல் பெண்கொடுமை தாண்டவமாடும் தமிழ்நாட்டில், சட்டம் ஒழுங்கை காற்றில் பறக்கவிட்ட முதல்வர் விஜய்யை இம்மாமன்றம் வன்மையாக கண்டிக்கின்றது.

**வள்ளுவருக்கு பெரும் புகழ் சேர்த்த கலைஞர்!**

20. எச்சிலை காணாத கற்சிலை, அது எச்சிலை, அச்சிலை கன்னியாகுமரியில் இருக்கும் கலைஞரால் உருவாக்கப்பட்ட என் ஐயன் வள்ளுவர் சிலை. மற்றவர்கள் எழுப்புகின்ற சிலைகளில் எல்லாம் காகம் உட்காரும். என் தலைவன் கலைஞர் வள்ளுவனுக்கு குமரியில் நிறுத்திய சிலையில் மட்டுமே மேகம் உட்காரும். அந்த வள்ளுவனுக்கு எந்த சாயமும் பூசாமல் புகழ் சூட்டினார் கலைஞர்.

குறளோவியம், வள்ளுவர் கோட்டம் என வரிசையாக கலைஞரால் புகழ் பாடப்பட்ட அந்த வள்ளுவனுக்கு காவிச்சாயம்பூசி, வள்ளுவனின் கண்ணியத்தை குறைத்த, தமிழ் பூமிக்கு புண்ணியமில்லாத காவிகளை வன்மையாக கண்டிக்கிறோம்.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் கழக வர்த்தகர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

---


## திருச்சி மத்திய - வடக்கு மாவட்டங்களில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - நல உதவிகள் வழங்கல்!

### மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி-ந.தியாகராஜன் அறிக்கை!

சென்னை, ஜூன் 3-

திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





தி.மு.கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிற்ப்பிற்கிணங்கவும், கழக முதன்மை செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவருமான அண்ணன் கே.என்.நேரு அவர்களின் வழிகாட்டுதலின்படியும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளான இன்று (03.06.2026- புதன்கிழமை) காலை சுமார் 08.00 மணியளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மத்திய, வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய நகர, பகுதி பேரூர், கிளை கழகங்கள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுகிறோம். அதனை தொடர்ந்து, நமது மத்திய வடக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக்கழங்கள் மற்றும் அனைத்து அணிகளின் சார்பில் புதியதாக தி.மு. கழக கொடியினை ஏற்றியும் பொது மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைகளை இன்றைய இளைய தலைமுறையினர் மற்றும் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் சமூக வலைத்தளங்களில் வீடியோக்களாக பதிவிட்டு பகிர்ந்திட வேண்டுகிறோம்

இவ்வாறு அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

---

# தலைவா! உன் புகழ்வாழ்க!



தந்தை பெரியாரும்
சிந்தைநிறை அண்ணாவும்
விந்தையென ஒருருவாய்
வந்த எங்கள் மன்னவனே!

"வீழ்வதுநாம் என்றாலும்
வாழ்வதுநம் தமிழ்"என்றே
ஆழ்மனத்தி லே,பதிய
அனைவருக்கும் சொன்னவனே!

அகரச்செந் தமிழுக்கோர்
அரணாக வாய்த்தவனே!
சிகரத்தின் உயரத்தில்
செம்மொழியை வைத்தவனே!

இன்னலுற்று வெஞ்சிறையில்
வெந்தவனே! எந்தமிழர்
முன்னேறப் படிக்கட்டாய்
முதுகெலும்பைத் தந்தவனே!

அடல்மறவர், யாருக்கும்
அஞ்சாத தமிழர்என
உடன்பிறப்புப் பெரும்படையை
உருவாக்கி வென்றவனே!

தென்புலத்தை மீட்கவந்த
தீரர்களை, வீரர்களை
அன்பு முகம்காட்டி
அரவணைத்துச் சென்றவனே!

மறையுமோ அழகுமுகம்?
மறக்குமோ ஆசைமுகம்?
உறங்கினால் கனவிலும்
உனதுமுகம்! எம்தலைவா!

நினைவுநாள் உனக்கில்லை!
நேற்று,இன்று, நாளைஉன்னை
நினையாத நாள்ஒன்று
நிச்சயமாய் எமக்கில்லை!

வாராது போல்வந்த
மாமணிநின் திருவடியை
ஈரக் கடலலைகள்
எப்போதும் வணங்கிஎழும்!

கோள்களும்உன் பெயர்போற்றிக்
கொண்டாடும்! நாட்காட்டித்
தாள்களும்உன் பொதுவாழ்வுச்
சாதனையைக் கவிபாடும்!

மூப்பிலும்நீ தமிழ்நாட்டை
முழுவதுமாய் சுற்றிவந்து
காப்பாற்றி வைத்ததனால்
கைகூப்பும் எண்டிசையும்!

மேற்குமலைத் தொடர்ச்சியிலே
மிதந்துவரும் காற்றும்,உன்
நாற்காலிச் சக்கரத்தை
நாடிவந்து முத்தமிடும்!

மழைமுகில்உன் எழுதுகோல்
மையில்,மையல் கொண்டதனால்
பொழியும்இளந் தூறல்எனும்
பூத்தூவி உனைவணங்கும்!

வெண்ணிலவின் தலைமையிலே
விண்மீன்கள் கூட்டம்இந்த
மண்மீதுன் நினைவிடத்தில்
மலர்வளையம் வைக்கவரும்!

ஓங்கும்எழிற் பூவனங்கள்
ஒன்றாகி அணிவகுத்துத்
தூங்கும்உன்றன் கல்லறையில்
தோரணமாய் காட்சிதரும்!

முன்விழித்து நீஎழுந்த
பின்,விழிக்கும் சூரியன்உன்
பொன்னடிக்குக் கண்விழித்துத்
தன்வணக்கம் சொல்லவரும்!

நோற்றவத்தால் பிறந்தவனே!
நூலகநூல் அத்தனையும்
ஆற்றாமல் படபடக்கும்!
அறிவுமகன் உன்பிரிவால்!

தோற்றமுண்டு! முடிவில்லை!
துலங்கும்உன்பேர் காலம்வென்று
வீற்றிருக்கும் பெரும்பேறு!
விழாவெடுக்கும் வரலாறு!

கலைவணங்கும்! சிலைவணங்கும்!
"கருவில்வந்த திரு"நின்னை
மலைவணங்கும்! வான்வணங்கும்!
வையகமே உனைவணங்கும்!

உலகமொழி அத்தனையும்
ஒருகுடைக்கீழ் வந்துநின்றே
தலைவணங்கும்! உனதுபுகழ்
தமிழ்போல வாழ்க!என்றே!



… கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**